## தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

ந.க.எண். 34751/எம்/இ1/2023, நாள்.28.06.2023

பொருள்: பள்ளிக் கல்வி – மாணவர்கள் நிதிசார் கல்வியறிவு பெறுதல் – அனைத்திந்திய வினாடி – வினா பேட்டிகள் மாணவர்கள் கலந்து கொள்ளுதல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு

பார்வை : RBI–ன் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்டல இயக்குநர் அவர்களது கடிதம் DO.CHN. FIDD. NO.196/ 02.08.040/ 22–23, Feb 27, 2023

*************

மாணவர்களிடையே நிதிசார் கல்வியறிவு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்திய ரிசர்வ் வங்கியால் அனைத்திந்திய அளவில் வினாடி–வினா போட்டிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இப்போட்டிகளில் 8 முதல் 10 வகுப்புகளில் பயின்று வரும் அரசு / நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை பள்ளிகளின் மாணவர்கள் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பார்வையில் காணும் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இப்போட்டிகள் வட்டார, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடத்தப்பட உள்ளதாகவும், இவ்வினாடி–வினா போட்டிகளில் RBI/NCFE இணையதளத்தில் இடம் பெற்றுள்ள நிதிசார் கல்வி தொடர்பான விவரங்கள், வங்கிகள்/பொருளாதாரம் தொடர்பான தற்போதைய நிகழ்வுகள், G20–அமைப்பு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் வினாடி–வினா போட்டிக்கான வினாக்கள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் சார்ந்து பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1. இப்போட்டியில் பங்கேற்க ஆர்வமுள்ள, பள்ளி அளவிலான வினாடி–வினா மற்ற செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்டு வரும் 1 மாணவர் 1 மாணவி அடங்கிய

இரு நபர் குழுவினை பள்ளி அளவில் தெரிவு செய்து வட்டார அளவிலான போட்டிகளுக்கு தலைமை ஆசிரியர்கள் பரிந்துரைக்க வேண்டும்.

2. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை), மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் RBI அலுவலர்களுடன் இணைந்து வட்டார அளவிளான போட்டிகளை 03.07.2023 முதல் 05.07.2023-க்குள் நடத்த திட்டமிட வேண்டும்

3. மாவட்ட அளவிலான போட்டிகள் 10.07.2023 முதல் 12.07.2023 வரை RBI ஆல் நடத்தபட உள்ளது. இப்போட்டிகள் நடத்துதல் சார்ந்து மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் உடன் இணைந்து, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலக பள்ளித் துணை ஆய்வாளர் ஆகியோர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

இணைப்பு
RBI வினாடி-வினா போட்டிகளுக்கான வட்டார
அளவிலான ஒருங்கிணைப்பாளர்கள் பட்டியல்
மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்கள் விவரம்

நகல்
RBI-ன் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்டல இயக்குநர்